**ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டம் - 2021**

ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2021 ஏப்ரல் 22 ஆம் திகதிய 6621-எல்கே மற்றும் 6619-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வட மாகாண சபை, கிழக்கு மாகாண சபை மற்றும் நீர் வளங்கள் சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவுள்ளன. மேல் மகாவலி நீர்நிலையை மீட்டெடுத்தல், நீர்வள முகாமைத்துவத்திற்கான நிறுவன திறனை வலுப்படுத்துதல் மற்றும் நீர் வள உட்கட்டமைப்பின் செயற்பாட்டை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அணைகளின் மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசனத்திற்கான மேம்பட்ட நீர் விநியோக வலையமைப்புக்களை செயற்பாட்டு ரீதியாக குறிக்கிறது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவம், அணை பாதுகாப்பு தொடர்பான உட்கட்டமைப்பு மேம்பாடுகள், தற்செயல் அவசர பதிலளிப்பு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய நான்கு கூறுகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,199.43 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75.03 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,158.55 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 69.53 மில்லியன் ஆசிய அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 மே 13 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் அத்தியாயம் 4 இன் 3.2 ஆம் உட்பிரிவு | செயற்திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த கிரய மதிப்பீடுகளை கணக்காய்வாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வரிசை முகவர்களுடன் சரியான ஒருங்கிணைப்பு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் உட்பிரிவு | RB கால்வாயின் மேம்பாட்டு பணிகளுக்கான பொறியாளர் மதிப்பீடு, அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களைக் கருத்தில் கொள்ளாமல் வெட்டப்பட்டது. அவ்வாறு வெட்டப்பட்டதால் ஒப்பந்த பெறுமதியின் மீதான MPC அடிப்படை அங்கீகரிக்கப்படாமல் DPC ஆல் பெறுகை நடைமுறையை பின்பற்றுவதற்கு முகாமைத்துவம் வாய்ப்பை எடுத்திருந்தது. பொதுவான நிலையான உருப்படிகள் இரண்டு ஒப்பந்தங்களிலும் பிரதிசெய்யப்படுவதால் ஒப்பந்தங்களின் பெறுமதி அதிகரித்திருந்தது | IA இந்த இரண்டு பொதிகளையும் இணையாக நடைமுறைப்படுத்த விரும்புகிறது. எனவே உலக வங்கி இதற்கு ”ஆட்சேபனை இல்லை” என குறிப்பிட்டுள்ளது. | மீறலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இந்த விடயத்திற்கு எதிராக உள்ளக கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

பெறுகை திட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 53 பொதிகள் தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. எனினும், மிளாய்வாண்டில் 16 பொதிகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டம் பெறுகைத் திட்டத்தில் 65 சதவீதத்திற்கு மேல் பூர்த்தி செய்யத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் உள்ள வளவ செயற்திட்டத்தின் RB கால்வாய் புனரமைப்புக்காக இரண்டு ஒப்பந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. ஆனால், ஒப்பந்ததாரர் வேலைத் திட்டத்தின் பிரகாரம் நிர்மாண பணிகளை மேற்கொள்ளவில்லை. மேலும், அவர்களின் பணி 2022 ஏப்ரல் 09 முதல் முறையான அறிவிப்பு இல்லாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் பணியை நிறுத்தும் அபாயம் உள்ளதாக உரிய ஆவணங்கள் காட்டிய போதிலும் ரூபா 170 மில்லியன் தொகையான முற்பணம் மற்றும் பகுதி கொடுப்பனவு ஒப்பந்ததாரர் ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டார். எனினும், உடன்படிக்கையின் பிரகாரம் முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பிணைமுறிக்கான உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சிக்கனமற்ற பெறுமதி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறிவிடப்பட வேண்டும். |
| (ஆ) | வளவ RB 41 கிலொமீற்றர் பிரதான கால்வாயை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை ஏனைய ஒப்பந்ததாரர்கள் 2.5% கழிவு சலுகைகளை கருத்தில் கொள்ளாமல் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்குவதற்கு திணைக்கள பெறுகைக் குழு தீர்மானித்துள்ளது. மேலும், DPC குறைந்த கேள்விதாரருடன் பேச்சுவார்த்தை நடாத்தாமல் இரண்டாவது குறைந்த கேள்விதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. | M/S பினைட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் வழங்கிய எண்கணித திருத்தம் மற்றும் கழிவு (2.5%) இற்குப் பின்னர், M/S வீரசூரிய பில்டேர்ஸின் திருத்தப்பட்ட கேள்வி விலை ரூபா 525 மில்லியனாகும், இது M/S பினைட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் திருத்தப்பட்ட விலையான ரூபா 528 மில்லியனை விடக் குறைவான ஆகும். | கேள்வி மதிப்பீட்டு செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிர்மாண முகாமைத்துவ சேவையின் விபரங்கள் BOQ அல்லது பேச்சுவார்த்தைக் கட்டத்தில் இறுதி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக ஒப்பந்ததாரருக்கு இந்த உருப்படியின் கீழ் வழங்கப்படும் சேவைகளை பேச்சுவார்த்தை பெறுமதி மட்டுப்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே, மேற்படி பேச்சுவார்த்தை மதிப்பீட்டில் தாக்கத்தை | கேள்வி ஆவணங்களின் பிரகாரம் செயற்திட்டத்தைச் சீராகச் செயற்படுத்துவதற்குத் தேவையான பதவிநிலைகள் ஏதுமின்றி, தேவையான தகுதிகளுடன் முக்கிய பணியாளர்களின் பட்டியல் கோரப்பட்டது. | கேள்வி மதிப்பீட்டு செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுத்தியிருக்காததுடன் மதிப்பீடு மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் நிலையான தன்மையை உறுதிப்படுத்துவதை மோசமாகப் பாதித்துள்ளது. | | |
| (ஈ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஒப்பந்தங்கள் 2021 நவம்பர் 20 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரர் ஏற்றுக்கொள்ளல் கடிதத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டார். எனினும், கேள்வி பிணைமுறி காலாவதியாகும் வரை அதற்கிணங்க PMU சட்ட நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் மற்றும் பாதுகாப்புப் பிரிவு 2022 ஏப்ரல் மாதத்தில் களத்திற்குச் சென்று இந்த நிலைமைகளைக் அவதானித்தது. எதிர்பார்க்கப்படும் அபாயங்களைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒப்பந்ததாரருக்கு குழு அறிவுறுத்தியது. | சிக்கனமற்ற பெறுமதி சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவடப்பட வேண்டும். |

## 3.3 கள விஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 22.4 மில்லியன் தொகையான வளவ RB 41 கிலோமீற்றர் பிரதான கால்வாயை மேம்படுத்துவதற்கான 02 ஒப்பந்தங்களுக்கு IPC இல. 01 ஐ பொறியியலாளர் அங்கீகரித்துள்ளார். வேலைத்தளத்தை பாதுகாக்கவும், சுற்றாடல் பாதிப்பை குறைக்கவும் ஒப்பந்ததாரர் நடவடிக்கை எடுக்காததாலும், இடைநிறுத்தப்பட்டதாலும், பெரும்பாலான நிர்மாணப் பணிகள் வீணாகி வருவது பௌதீக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. இதனால் கால்வாய் அணை வீதியில் செல்லும் பொதுமக்கள் மோசமாக பாதிக்கப்பட்டனர். | சுற்றாடல் மற்றும் பாதுகாப்புப் பிரிவு 2022 ஏப்ரல் மாதத்தில் களத்திற்குச் சென்று இந்த நிலைமைகளைக் அவதானித்தது. எதிர்பார்க்கப்படும் அபாயங்களைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒப்பந்ததாரருக்கு குழு அறிவுறுத்தியது. | வேலைத்தளத்தை பாதுகாப்பதற்கும், சுற்றாடல் பாதிப்பைத் தணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து சிக்கனமற்ற பெறுமதி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 2.8 மில்லியன் மற்றும் ரூபா 3 மில்லியன் தொகைகள் முறையே IPC இல. 01 இன் கீழ் களத்தில் உள்ள பொருட்களுக்காக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அனைத்து பொருட்களும் முறைசாரா முறையில் கால்வாய் அணை வீதியில் கையிருப்பில் உள்ளதுடன் பெரும்பாலான இடிபாடுகளின் தரம் எதிர்பார்த்த தரத்தை விட மோசமாக உள்ளது. | பொருளின் தரத்தை மீள உறுதிப்படுத்தவதற்கு பொறியாளருக்கு தெரிவிப்பதோடு, அடுத்த IPC இன் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வேலைத்தளத்தை பாதுகாப்பதற்கும், சுற்றாடல் பாதிப்பைத் தணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து சிக்கனமற்ற பெறுமதி அறவிடப்பட வேண்டும். |